விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 11 செவ்வாய் 27.07.2021 மலர் - 2, இதழ் - 112

# பாதிரிக்கு வக்காலத்து

கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் கடந்த 18ம் தேதி கிறிஸ்தவ இஸ்லாமிய கூட்டமைப்புகளின் சார்பில் உரிமை மீட்பு மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் பாதிரி ஜார்ஜ் பொன்னையா, மதக்கலவரத்தை தூண்டும் விதமாக பாரத மாதா, பூமித்தாய், பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நாகர்கோயில் எம்.எல்.ஏ எம்.ஆர். காந்தி உள்ளிட்ட தலைவர்கள் குறித்து அவதூறாக பேசினார். மேலும், “உங்கள் திறமையால் நீங்கள் தேர்தலில் வெற்றி பெறவில்லை. கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் சேர்ந்து போட்ட பிச்சையால்தான் வெற்றி பெற்றீர்கள்” என்று தி.மு.கவை தோலுரித்தார்.

இதையடுத்து தேசம் முழுவதும் பாதிரியின் பேச்சுக்கு கண்டனம் எழுந்தது. இதைத் தொடர்ந்து தப்பிச்சென்ற பாதிரி ஜார்ஜ் பொன்னையா, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவரின் பேச்சுக்கு தி.மு.க தலைவர்கள் எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை. காங்கிரசோ, 'யாராக இருந்தாலும் கண்டிக்கிறோம்' என்று ஒற்றை வரியில் முடித்துக் கொண்டது. ம.தி.மு.க, கம்யூனிஸ்ட் கட்சிகள் மூச்சு கூட விடவில்லை. குமரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் தாரகை கத்பர்ட், பாதிரியின் கைதை கண்டித்துள்ளார். விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த வன்னியரசு, தனது டுவிட்டர் பதிவில், பதிவில், பாதிரியை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று உருகியிருக்கிறார்.

தி.மு.கவினர், அவர்களது கூட்டணி கட்சியினரின் சிறுபான்மையினர் மீதான பாசம், ஹிந்துக்கள் மீதான வெறுப்பை காட்டும் விதமாகவே அவர்களின் இந்த நடவடிக்கைகள் உள்ளன என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



# உணர்வார்களா விவசாயிகள்?


விஜயபாரதம்

தேனி மாவட்டத்தின் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி, முல்லைப் பெரியாறு ஆற்றுப் பகுதிகளில் விவசாயிகள், தங்கள் நிலங்களில் போர், கிணறுகள் அமைத்து, மின்சார பம்ப்செட் மூலம் தண்ணீரை எடுத்து பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், அனுமதி இல்லாமல் ஆற்றுநீர் திருடப்படுவதாகக் கூறி முல்லைப் பெரியாறு அணை பகுதி விவசாயிகளின் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜூலை 8 அன்று, மதுரையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தேனி மாவட்ட விவசாயிகள் அனுமதி இல்லாமல் தண்ணீரை பயன்படுத்தி அரசுக்கு இழப்பை ஏற்படுத்துவதாக குற்றம் சாட்டியுள்ளார். மேலும், விவசாயிகளை ஒட்டு மொத்தமாக திருடர்கள் என்று நாகூசாமல் கூறியுள்ளார். முதல்வர் ஸ்டாலின் உட்பட தி.மு. கவினரோ, அவர்களது தோழமை கட்சியினரான திருமா, சீமான், வைகோ, கம்யூனிஸ்ட்டுகள், தி.மு.க ஆதரவு விவசாய போராளிகள், சுற்றுசூழல் ஆர்வலர்கள் என யாரும் இதுவரை பழனிவேல் தியாகராஜனுக்கு எதிராக கண்டனமோ, எதிர்ப்போ, தெரிவிக்காமல் தொடர்ந்து மௌனமாக உள்ளனர். ஆனால், இதற்கு பா.ஜ.க மூத்தத் தலைவரான ஹெச். ராஜா, பா.ஜ.க தமிழகத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும், பா.ஜ.கதான் விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் பெற புதிய விவசாய சட்டங்கள், வங்கிகளில் நேரடி மானியம், வேம்பு கலந்த யூரியா, வருமானத்தை இரட்டிப்பாக்கும் விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்கள் என பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் இனியாவது உணர்வார்களா யார் விவசாயிகளின் உண்மையான நண்பன் என்று?

# கோயில் நிலம் மீட்க கோரிக்கை


விஜயபாரதம்

ராமநாதபுரம் சர்க்கரை கோட்டை பகுதியில் அக்னி வீரபத்திர ஸ்வாமி திருக்கோயில் உள்ளது. ஹிந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோயிலுக்கு சொந்தமாக சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் உள்ளன. இந்த கோயில் நிலத்தை சலீம்கான், முஸ்தபா மற்றும் காதர் தாஸ் திருமண மஹால் உரிமையாளர் ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்களிடம் இருந்து ஆக்கிரமிப்பு நிலத்தை உடனடியாக மீட்டு தர வேண்டும் என்று பூஜாரி ராஜேந்திரன் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் கடந்த 2013ம் ஆண்டு மனு தாக்கல் செய்திருந்தார். ஆனால் கோயில் நிலங்கள் தற்போதுவரை மீட்கப்படவில்லை. மேலும் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தில் அனுமதி இன்றி கட்டடங்கள் கட்டி வருவாய் ஈட்டி வருகின்றனர். அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலத்தை மீட்டு தருமாறு இந்து முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

# பேருந்துகளில் ஸ்டாலின் புகைப்படம்



விஜயபாரதம்

நாளுக்கு நாள் அரசின் நலத்திட்டங்களில் தி.மு.க தலைவர்களின் புகைப்படங்கள் இடம்பெறத் துவங்கிவிட்டன. தமிழகத்தில் அரசு போக்குவரத்து கழகம் சார்பில் புதிதாக இயக்கப்படும் பேருந்துகளில் முதலமைச்சர் ஸ்டாலின் படம் ஒட்டப்பட்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, விளம்பரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டோம் என்பதை கூறிய தி.மு.க, தற்போது விளம்பத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பது பொதுமக்களிடையே கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

# கிறிஸ்தவ போதகர் பணியிடை நீக்கம்



விஜயபாரதம்

கோவை ரேஸ் கோர்ஸ்சில் உள்ள பிஷப் அப்பாசாமி கல்லூரியில் சி.எஸ்.ஐ நிர்வாக குழு கூட்டம் நடந்தது. அப்போது இரு தரப்பினர் இடையே ஊழல் குறித்த சர்ச்சையில் மோதல் ஏற்பட்டது. அதில் வழக்கறிஞர் நேசமொர்லின் என்பவர் இரும்புதடியால் தாக்கப்பட்டார். அவர் கொடுத்த புகாரின் பேரில் போதகர்கள், சார்லஸ் சாம்ராஜ், வில்சன் குமார் மற்றும், சுதன் அப்பாதுரை உட்பட 15 பேர் மீது ரேஸ்கோர்ஸ் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர். இதேபோல சி.எஸ்.ஐ. ஆலய செயலாளர் ஜேக்கப் கொடுத்த புகாரின் பேரில் நேசமொர்லின், அமிர்தம் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் இந்த மோதல் தொடர்பாக கோவை ரேஸ் கோர்சில் உள்ள ஆல் சோல்ஸ் ஆலய போதகர் சார்லஸ் சாம்ராஜை கோவை திருமண்டல சி.எஸ்.ஐ. பிஷப் திமோத்தி ரவீந்தர் பணியிடை நீக்கம் செய்துள்ளார்.

# வி.ஹெச்.பி. புத்தகம் வெளியீடு



விஜயபாரதம்

புதுவையில் விஷ்வ ஹிந்து பரிஷத் வடதமிழகத்தின் மாநில செயற்குழு நடைபெற்றது. அகில பாரத சந்யாசிகள் சங்கம் ஸ்தாபகர் ராமானந்தா சுவாமி, அகில பாரத இணைபொதுசெயலாளர் ஸ்தாணுமாலயன், தென்பாரத அமைப்பாளர் P.M.நாகராஜன், அகில பாரத இணை செயலாளர் சத்யம் உள்ளிட்ட பல முக்கியத் தலைவர்கள் இதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில், ஸ்ரீராம ஜென்மபூமி நிதி சேகரிப்பு சமயத்தில் காஞ்சி பெரியவா பூஜ்ய விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆற்றிய உரை புத்தகமாக வெளியிடப்பட்டது.

# புத்தகம் வெளியீடு



வனவாசி சேவா கேந்திரம், சென்னை மகாநகர் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதன்இரண்டாவது அகில பாரதத் தலைவர் அமரர் ஜெகதேவ்ராமின் நினைவு அஞ்சலி நிகழ்ச்சியும், அவரை பற்றிய பட புத்தக வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

# பேருந்தை வழிமறித்து அராஜம்



விஜயபாரதம்

கரூரில் திருமாநிலையூர் – லைட் ஹவுஸ் கார்னர் இடையே உள்ள புதிய அமராவதி பாலத்தில் கோவையை நோக்கி அரசுப் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது, போதை ஆசாமி ஒருவர் கையில் அரிவாளுடன் பேருந்தை வழிமறித்தார். 'என் அரிவாளுக்கு பதில் சொல்லி விட்டு செல,' என்று கூறி விட்டு, ஓட்டுநரை வெட்ட முற்பட்டுள்ளார். அவரை சக அரசுப் பேருந்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் பொதுமக்கள் துரத்தியதால் அரிவாளுடன் ஓடிவிட்டார். ஆனால், அவருடன் வந்த மற்றொருவர் சிக்கிக்கொண்டார். இந்நிலையில், அங்கு வந்த நான்கு நபர்கள், நாங்கள் அப்படித்தான் காண்பிப்போம். அதற்கு எப்படி நீங்கள் அடிக்கலாம் என்று கூறி, அரசு பேருந்து ஓட்டுநர், நடத்துநர்களை தாக்க முயற்சித்தனர். இப்படி பஞ்சாயத்து செய்ய வந்த நபர்கள் தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியின் புகைப்படம் ஒட்டிய வாகனத்தில் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எடியூரப்பா ராஜினாமா



விஜயபாரதம்

கர்நாடகாவில் ஆட்சி பொறுப்பேற்று 2 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் நேற்று கர்நாடகா முதலமைச்சர் பதவியில் இருந்து விலகப்போவதாக அறிவித்த பி.எஸ். எடியூரப்பா, தமது ராஜிநாமா கடிதத்தையும் மாநில ஆளுநரிடம் அளித்தார். முன்னதாக, கர்நாடக சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கண்ணீர் மல்க பேசிய எடியூரப்பா, 'முதல்வர் பதவியில் இருந்து நான் விலகுவது துயரத்தால் அல்ல, இதை மகிழ்ச்சியாகவே செய்கிறேன். மாநிலத்தில் சேவையாற்ற எனக்கு வாய்ப்பு அளித்த பிரதமர் மோடிக்கும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கும் எனது நன்றியை தெரிவிக்க வார்த்தைகளே இல்லை. எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பிறரது விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் விதமாக கட்சிக்காக உழைப்பேன்," என்று உணர்ச்சி பொங்க பேசினார்.

# கோழி கழிவில் பயோடீசல்

கோழி இறைச்சிக் கழிவில் இருந்து பயோடீசல் தயாரிப்பை கண்டுபிடித்ததற்காக கேரள கால்நடை மருத்துவருக்கு காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. கேரளாவின் வயநாட்டில் உள்ள கேரள கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணியாற்றும் ஜான் ஆபிரகாம், நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரியில் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சியில், கோழி இறைச்சிக் கழிவில் இருந்து பயோடீசல் கண்டுபிடிக்கும் ஆய்வை மேற்கொண்டு வெற்றி பெற்றார். இவர் கண்டுபிடித்த ஒரு லிட்டர் பயோடீசல் 38 கி.மீ. மைலேஜ் கொடுக்கும். இதை தற்போதைய டீசல் விலையில் 40 சதவீதம் அளவுக்கு விற்க முடியும். அதிக மைலேஜ் தருவதோடு, வழக்கமான டீசலை விட காற்று மாசுபாட்டை பாதியாக குறைக்கும் என கூறப்படுகிறது. தற்போது இந்திய காப்புரிமை அலுவலகம் பயோ டீசல் கண்டுபிடிப்புக்கு காப்புரிமை வழங்கி உள்ளது. கடந்த 2015 முதல், இவர் கண்டறிந்த பயோடீசலில்தான் அவர் பணியாற்றும் கல்லூரி வாகனங்கள் இயங்குகின்றன மேலும், தற்போது அவர் பன்றிக் கொழுப்பில் இருந்து பயோடீசல் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

விஜயபாரதம்




# தெலுங்கானா மக்களுக்கு மோடி வாழ்த்து

தெலங்கானா மாநிலம், வாரங்கல் மாவட்டம் பாலம் பேட்டில், காகதிய வம்ச மன்னர்களால் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பழமை வாய்ந்த ராமப்பா கோயில் உள்ளது. இந்தக் கோயிலின் மூலவர் ராமலிங்கேஸ்வரர். இந்தக் கோயிலை வடிவமைத்த கட்டடக் கலைஞர் ராமப்பாவின் பெயரால் இந்தக் கோயில் அறியப்படுகிறது. மத்திய அரசு கடந்த 2019ல் யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னம் பட்டியலில் இடம் பெறுவதற்காக இக்கோயிலைப் பரிந்துரைத்தது. அதனை ஏற்று உலக பாரம்பரிய சின்னமாக இந்தக் கோயிலை யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், 'தெலங்கானா மக்களுக்கு வாழ்த்துகள். காகதிய வம்சத்தின் சிறப்பான கைவினைத் திறனை ராமப்பா கோயில் வெளிப்படுத்துகிறது. இந்த கம்பீரமான கோயில் வளாகத்தைப் பார்வையிட வருமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்' எனக் கூறியுள்ளார். மேலும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி உள்ளிட்ட பலர் தெலுங்கானா மக்களுக்கு வழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.



விஜயபாரதம்

# தடுப்பூசிகளுக்கு எதிராக போராட்டம்

உலகமே கொரோனாவுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிறது. உலக அரசாங்கங்கள் அதனை தடுக்க பல்வேறு ஆக்கபூர்வ முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த சூழலில், கொரோனா கட்டுப்பாடுகள், கட்டாய தடுப்பூசி, கட்டாய முகக்கவசம், பொதுமுடக்கம், கொரோனா பரிசோதனைகள் என எதுவும் வேண்டாம். அது தனி மனித உரிமைகளை பாதிக்கும் என இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து 'விழிப்புணர்வு இந்தியா இயக்கம்' (Awaken India Movement) என்ற தன்னார்வ தொண்டு அமைப்பு 'சுதந்திர பேரணி' என்ற நிகழ்ச்சியை நடத்த அழைப்பு விடுத்துள்ளது.

இது பாரதத்தில் மட்டுமல்ல உலக அளவில் செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு நாட்டு அரசாங்கத்தின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக சுமார் 45 நாடுகளில் உள்ள 120 நகரங்களிலும் உள்ள மக்களை கூட்டி நடத்தி வருகிறது. கடந்த ஜூலை 24ல் நாகாலாந்தில் கோஹிமா, திமாபூரில் உள்ள சில உள்ளூர் தேவாலயங்கள், சமூக ஆர்வலர்கள் இந்த பேரணியில் கலந்துகொண்டனர்.

அதேபோல மேகாலயாவின் ஷில்லாங், தெலுங்கானாவின் ஹைதராபாத் உள்ளிட்ட இடங்களிலும் பேரணிகள் நடைபெற்றதாகவும் பல இடங்களில் கொரோனா பொதுமுடக்க விதிமுறைகள் காரனமாக காவலர்கள் அதனை தடுத்து நிறுத்தியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இங்கு மட்டுமல்ல, பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்ற போராட்டம் வன்முறையாக மாறியது. இதேபோல ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, கிரேக்கம் உள்ளிட்ட நாடுகளிலும் போராட்டங்கள், பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் உலகம் முழுவதிலும் நடத்தப்பட்டுள்ள இந்த பேரணிகள், அதன் பின்னணியில் சில பெரிய சக்திகள் செயல்பட்டு வருகின்றன என்பதையே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**விஜயபாரதம்**










# காசி கோயில் நில பரிமாற்றம்



விஜயபாரதம்

முகலாய மன்னர் ஔரங்கசீப்பால், வாரணாசியின் 2,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த காசி விஸ்வநாதர் கோயில் இடிக்கப்பட்டு அங்கு ஞானவாபி மசூதி கட்டப்பட்டது. எனவே, அந்த நிலம் கோயிலுக்குச் சொந்தமானது என்று கூறி வழக்கு தொடரப்பட்டது. தொல்லியல் துறை ஆய்வு செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனை சன்னி வஃக்பு வாரியம் எதிர்த்து மனுத் தாக்கல் செய்தது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நிலையில், ஞானவாபி மசூதி நிர்வாகம் அதன் வளாகத்திற்கு வெளியே உள்ள 1,700 சதுர அடி நிலத்தை காசி விஸ்வநாதர் கோயில் அறக்கட்டளையின் நடைபாதை திட்டத்திற்கு வழங்கியுள்ளது. பதிலுக்கு காசி விஸ்வநாதர் கோயில் தரப்பில் 1,000 சதுர அடி நிலம் மசூதிக்கு பரிசளிக்கப்பட்டது. ‘மசூதிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலம், ஸ்ரீ காசி விஸ்வநாதர் சிறப்பு பகுதி மேம்பாட்டு வாரியத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. நிலத்துக்கும் மசூதியுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த நிலத்தை வக்ஃப் சொத்து என்பதால் வாங்க முடியாது. எனவே அதை பரிமாறிக்கொண்டோம்' என ஞானவாபி மசூதியின் பராமரிப்பாளர் எஸ்.எம்.யாசின் கூறியுள்ளார்.

# சிறந்த முதல்வர் யார்?




விஜயபாரதம்

அடுத்த ஆண்டு நடக்க உள்ள உத்தர பிரதேச சட்டமன்றத் தேர்தலுக்கு அனைத்து கட்சிகளும் தயாராகி வருகின்றன. இந்நிலையில், ‘மேட்ரைஸ் நியூஸ் கம்யூனிகேஷன்’ என்ற ஒரு தனியார் நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பில் 43 சதவீத மக்கள் தற்போதைய உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை சிறந்த முதல்வர் வேட்பாளராக தேர்வு செய்துள்ளனர். பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதியை 21 சதவீதத்தினரும் சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவை 20 சதவீதத்தினரும் தேர்வு செய்துள்ளனர். இதில் 14 சதவீத வாக்குகளைப் பெற்று காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தி கடைசி இடத்தை பிடித்துள்ளார். மேலும் கொரோனா 2வது அலையை குறித்த கேள்விக்கு 73 சதவீதம் பேர் யோகி ஆதித்தியநாத் கொரோனா 2வது அலையை சிறப்பாகக் கையாண்டதாகக் கூறியுள்ளனர். இதேபோல பெண்கள் பாதுகாப்பு, பட்டியலினத்தவர்கள் பாதுகாப்பு போன்ற விஷயங்களிலும் ஆளும் பா.ஜ.க சிறப்பாக செயல்படுவதாக மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# லிங்கில் வரும் வில்லங்கம்



விஜயபாரதம்

உங்கள் வங்கி கணக்கு எண் முடக்கப்பட்டது. வங்கி கணக்குடன் ஆதார் எண், பான் கார்டு இணைக்க வேண்டும்; நெட் பேங்கிங்'கை புதுப்பிக்க வேண்டும் என கூறி, சமீப காலமாக சில மர்ம நபர்கள் வங்கியில் இருந்து அனுப்புவது போல, ஒரு இணைய லிங்க்கை அனுப்பி வைக்கின்றனர். அந்த இணையவழி இணைப்பைக் கொண்டு தகவல்களை பதிவேற்ற கோரப்படுகிறது. அந்த லிங்க்கை நாம் கிளிக் செய்த 10 நிமிடங்களுக்குள், நமது வங்கி கணக்கில், ஏ.டி.எம்மில் இருந்து பணம் எடுத்தது போலவும், 'ஆன்லைன்' வாயிலாக பொருட்கள் வாங்கியது போலவும் பணம் சுருட்டப்படுகிறது. யாராவது புதிய நபர்கள் தொடர்பு கொண்டு, வங்கி எண், ஏ.டி. எம் கார்டு ரகசிய குறியீட்டு எண், ஓ.டி.பி எண்களை கேட்பது, ஏதேனும் சில எண்களை அனுப்பி, அதை, 'பார்வேர்டு' செய்ய சொல்லி கூறுவது போன்ற அழைப்புகளை துண்டித்து விடவும். இல்லையெனில் பணத்தை இழக்க நேரிடும் என, காவல்துறையினர் எச்சரித்துள்ளனர்.

# டிராவல்ஸ் மீது திருப்பதி தேவஸ்தானம் புகார்



விஜயபாரதம்

சென்னையில் இருந்து செயல்படும் ரேவதி பத்மாவதி டிராவல்ஸ் நிறுவனம் தலா 2,500 ரூபாய் கட்டணத்தில் திருப்பதி ஏழுமலையானை தரிசிப்பதற்கு சேவை டிக்கெட், உணவு வசதி ஆகியவற்றுடன் திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயில், சீனிவாசமங்காபுரம் கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி கோயில், காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் கோயில் ஆகிய கோவில்கள் உட்பட ஐந்து கோயில்களில் பக்தர்களை சென்னையிலிருந்து அழைத்து செல்வதாக பிரச்சாரம் விளம்பரம் செய்திருந்தது. இது தவிர திருப்பதி ஏழுமலையான் கோவில், திருச்சானூர் பத்மாவதி தாயார் கோவில், சீனிவாசமங்காபுரம் கல்யாண வெங்கடேஸ்வர சுவாமி கோவில், காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் கோவில் ஆகிய கோவில்கள் உட்பட ஐந்து கோவில்களில் அதே கட்டணத்தில் சாமி தரிசனம் வசதியும் செய்து கொடுக்கப்படும் என்றும் விளம்பரம் செய்திருந்தது. பக்தர்கள் வசதிக்காக ஆன்லைன் மூலம் 300 ரூபாய் தரிசன டிக்கெட்டுகள், கல்யாண உற்சவம் டிக்கெட்டுகள் ஆகியவை ஒவ்வொரு மாதமும் 20ம் தேதியன்று ஆன்லைனில் வெளியிடப்படுகிறது. அந்த டிக்கெட்டுகளை பக்தர்கள் ஆன்லைனில் முன்பதிவு செய்து ஏழுமலையானை வழிபடலாம். ஆன்லைனில் பக்தர்கள் நேரடியாக பெற்றுக்கொள்ளும் வகையில் வெளியிடப்படும் டிக்கெட்டுகளை தனியார் டிராவல்ஸ் நிறுவனம் முன் செய்து பதிவு செய்து பக்தர்களை கோயிலுக்கு அழைத்து செல்வது தேவஸ்தான விதிமுறைகளுக்கு மாறான செயல். இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. காவல்துறை இது குறித்து விசாரித்து வருகிறது.

# வலையில் சிக்கிய மீம்கள்






# ராகுலின் டிராக்டர் அரசியல்

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, கடந்த திங்களன்று விவசாய சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத்திற்கு ஒரு டிராக்டரை ஓட்டிச் சென்றார்.



விஜயபாரதம்

இதனையடுத்து 'டெல்லியின் சாலைகளில் விவசாய டிராக்டரை ஓட்டுவதற்கான உரிமம் உள்ளதா, அப்படி இருந்தாலும் டிராக்டரை ஓட்ட ராகுல் உரிமம் பெற்றுள்ளாரா, அவர் சாலை போக்குவரத்து விதிகளை மீறியுள்ளாரா என காவல்துறை விசாரித்து அவர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும். எரிபொருள் விலை உயர்ந்துவிட்டதாக கூறும் ராகுல், எரிபொருள் விலையை பொருட்படுத்தாமல் எதற்காக கஸ்லர் டிராக்டரை ஓட்டி வந்தார்' என இணையத் தளங்களில் நெட்டிசன்கள் கிண்டல் செய்து வருகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, நேற்று கார்கில் வெற்றி தினத்தை தேசமே கொண்டாடியது. அதில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு மரியாதையும், உயிரோடு இருப்பவர்களுக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டன. ஆனால் அன்றைய தினத்தில் தனது கீழ்தரமான அரசியல் நடவடிக்கைகளை ராகுல் முன்னெடுத்து நமது வீரர்களை அவமதித்துள்ளார் என்பதையே அவரது செய்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. கடந்த 2004 முதல் 2009 வரையிலான காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கார்கில் வெற்றித் திருநாள் கொண்டாட்டங்களை நடத்தியதே இல்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

# ரோஹிங்கியாக்களிடம் இருந்து நிலம் மீட்பு

டெல்லியில் உள்ள மதான்பூர் காதர் பகுதியில் ரோஹிங்கியா ஊடுருவல்காரர்களால் உத்தர பிரதேச அரசின் நீர்வள அமைச்சகத்திற்கு சொந்தமான 2.1 ஹெக்டேர் நிலம் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது. இதன் மதிப்பு ரூ. 150 கோடி. இதனை டெல்லி அரசிடம் முறையாகத் தெரிவித்து அவர்கள் ஒப்புதலுடனும் டெல்லி காவல்துறை உதவியுடன்னும் உத்தர பிரதேச அரசு அதிரடியாக மீட்டுள்ளது. அங்கிருந்த சட்டவிரோத கட்டுமானங்கள் இடித்துத் தள்ளப்பட்டன. முன்னதாக இதே போன்று பாரதத்தில் சட்டவிரோதமாகக் குடியேறிய ரோஹிங்கியா முஸ்லிம்கள், டெல்லி சரிதா விஹார் பகுதியில் ஆக்கிரமித்திருந்த சுமார் 6 ஹெக்டேர் நிலம் உ.பி அரசால் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


விஜயபாரதம்

# தங்க மங்கை பிரியா மாலிக்

டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வரும் அதே வேளையில், ஹங்கேரி நாட்டு புடாபெஸ்டில் உலக (ஜூனியர் லெவல்) மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பாரதத்தை சேர்ந்த மல்யுத்த வீராங்கனை பிரியா மாலிக் மாலிக் 73 கிலோ பிரிவில் தங்கப்பதக்கம் வென்று பெருமை சேர்த்துள்ளார்.



விஜயபாரதம்

# வளர்ச்சி பாதையில் அசாம்

அசாம் மாநிலம் குவாஹாத்தியில் உள்ள சங்கர்தேவ் கலாக்ஷேத்திராவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமீத் ஷா, 'பா.ஜ.கவின் முதல் ஆட்சிக் காலத்தில் அசாம் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுகிறது. அது இனியும் தொடரும். அசாம் மற்றும் மணிப்பூரில் பா.ஜ.க ஆட்சி அமைந்த பிறகு அங்கு முன்புபோல அடிக்கடி கடையடைப்புகள், போராட்டங்கள், வன்முறைகள் நடைபெறுவது இல்லை. வரலாற்று சிறப்புமிக்க போடோ ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன பல்வேறு கிளர்ச்சிக் குழுக்களுடன் பேச்சுவார்த்தை சரியான திசையில் பயணிக்கிறது. வரும் 2024க்குள் வடகிழக்கில் கிளர்ச்சிகள் முடிவுக்கு வரும். மக்களின் தனித்துவமான கலாச்சாரங்கள், மொழிகள், அடையாளம், உணவுப் பழக்கங்களைப் பாதுகாக்க பா.ஜ.க எப்போதும் விரும்புகிறது. பிரதமர் மோடி வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கிறார். கடந்த ஆறரை ஆண்டுகளில் 35 முறை வடகிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளார். வடகிழக்குப்பகுதி ஐந்து மத்திய அமைச்சர்களை பெற்றுள்ளது' என தெரிவித்தார். முன்னதாக, 430 படுக்கைகள் கொண்ட தமுல்பூர் மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய உள்துறை அமைச்சர், மாநில அரசின் பார்த்தானா திட்டத்தின் கீழ் கொரோனாவால் இறந்தவரின் குடும்பத்தினருக்கு தலா 1 லட்ச ரூபாய் நிதி உதவி வழங்கினார். பின்னர் புகழ்பெற்ற காமாக்கியா கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

விஜயபாரதம்



# தலைப்பில் குழப்பிய ப்ளூம்பெர்க்



விஜயபாரதம்

உங்கள் வங்கி கணக்கு எண் முடக்கப்பட்டது. வங்கி கணக்குடன் ஆதார் எண், பான் கார்டு இணைக்க வேண்டும்; நெட் பேங்கிங்'கை புதுப்பிக்க வேண்டும் என கூறி, சமீப காலமாக சில மர்ம நபர்கள் வங்கியில் இருந்து அனுப்புவது போல, ஒரு இணைய லிங்க்கை அனுப்பி வைக்கின்றனர். அந்த இணையவழி இணைப்பைக் கொண்டு தகவல்களை பதிவேற்ற கோரப்படுகிறது. அந்த லிங்க்கை நாம் கிளிக் செய்த 10 நிமிடங்களுக்குள், நமது வங்கி கணக்கில், ஏ.டி.எம்மில் இருந்து பணம் எடுத்தது போலவும், 'ஆன்லைன்' வாயிலாக பொருட்கள் வாங்கியது போலவும் பணம் சுருட்டப்படுகிறது. யாராவது புதிய நபர்கள் தொடர்பு கொண்டு, வங்கி எண், ஏ.டி.எம் கார்டு ரகசிய குறியீட்டு எண், ஓ.டி.பி எண்களை கேட்பது, ஏதேனும் சில எண்களை அனுப்பி, அதை, 'பார்வேர்டு' செய்ய சொல்லி கூறுவது போன்ற அழைப்புகளை துண்டித்து விடவும். இல்லையெனில் பணத்தை இழக்க நேரிடும் என, காவல்துறையினர் எச்சரித்துள்ளனர்.

# பாரதம் உதவ வேண்டும்

பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரில் மாகாணத்தில் நடைபெற உள்ள தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுபவர் சௌத்ரி முஹம்மது இஸ்மாயில் குஜ்ஜார். இவர், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் கட்சியான பி.எம்.எல்என் கட்சியின் அப்பகுதியின் தலைவர். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நடைபெற்றுது வரும் மாகாண தேர்தல்களில் பிரதமர் இம்ரான் கான் தலைமையிலான ஆளும் கட்சியினர் தங்களது வேட்பாளர்களை தாக்குகின்றனர். மோசடிகள் செய்கின்றனர். ஜெயிக்க பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்றனர். தங்களது கட்சி அலுவலகங்களை தாக்குகின்றனர் என தெரிவித்தார். மேலும், தேர்தல் நடத்துவதில் அரசு நிர்வாகம் ஒத்துழைக்காவிட்டால் இந்த விஷயத்தில் பாரதத்தின் உதவியை நாடுவேன் எனவும் தெரிவித்தார்.

விஜயபாரதம்




# நவாஸ் ஷெரீப் ஆப்கன் உயரதிகாரி சந்திப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மருத்துவ சிகிச்சைக்காக லண்டன் சென்றுள்ளார். ஆப்கனில் தலிபான் பயங்கரவாதிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் போர் நடந்து வரும் சூழலில், ஆப்கானிஸ்தான் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஹம்துல்லா மொஹிப் லண்டனில் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசியுள்ளார். இந்த சந்திப்பிற்கு பாகிஸ்தானில் உள்ள பிரதமர் இம்ரான் கானின் ஆதரவாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். முன்னதாக, ஹம்துல்லா மொஹிப், பாகிஸ்தானை விபச்சார விடுதி என்று கூறியிருந்தார் என்பதும் அது பாகிஸ்தானில் பெரும் சர்ச்சைக்குள்ளானது என்பதும் குறிப்பிடத்தக்கது. இது குறித்து நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் நவாஸ், “எனது தந்தை நல்ல எண்ணத்திலேயே அண்டை நாட்டுடன் நட்புறவை மேற்கொள்ள பேசினார். வேறு எந்த உள்நோக்கமும் இல்லை” என்றும் தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# காலத்தை வென்ற கவிஞர்




விஜயபாரதம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நாகர்கோயில் அருகில் உள்ள தேரூரில் பிறந்தார். பள்ளிக்கூடத்தில் மலையாளமே கற்பிக்கப்படும் சூழ்நிலையில், சாந்தலிங்கத் தம்பிரான் என்ற துறவியிடம் தமிழைப் பயின்றார்.

இளமைப் பருவத்தில் கோயில் ஒன்றில் கொடை காணச் சென்றார் தேசிக விநாயகம் பிள்ளை. அங்கே ஆட்டினைப் பலி கொடுக்கும் காட்சியைக் கண்ட அவருக்கு நெஞ்சம் உருகியது. அந்த உருக்கத்தில் அவர் பாடிய கவிதை மொழிகள், கொல்லாமையை போதித்தன. பின்நாளில் உமையம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.


நாகர்கோயிலில் நகண்கோட்டாற்றில் தொடக்கப் பள்ளி ஆசிரியராக பணியாற்றினார். ஆங்கிலப் புலமையும் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் மிக்க அவர் பின்னர் கல்லூரி ஆசிரியராகவும் பணியாற்றினார். குழந்தைகளுக்கு ஏற்ற பாடல்கள் தமிழில் பல உண்டு. எனினும் குழந்தைகளே எளிதில் பொருள் புரிந்து பாடும் பாடல்களே தேசிக விநாயகம் பிள்ளையால் பாடப்பட்டது.

சொல் அமுதாய் இனிக்கும் எளிமையும் இனிமையும் நிறைந்த 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுப்பை கவிமணி வழங்கினார். அதனால் தமிழறிஞர்கள் குழு அவருக்கு 'கவிமணி' என்ற பட்டத்தை வழங்கியது. அத்தொகுதியில் “அப்பம் திருடின எலி”, “பசுவும்

கன்றும்”, “பொம்மைக் கலியாணம்” போன்றவை இளம் பிள்ளைகளுக்கு மகிழ்வைத் தருவதோடு உலக நடைமுறைகளையும் ஊட்டின.

நாகர்கோவிலுக்கு வந்த ராஜாஜி கவிமணியைக் காண விரும்பினார். அவருடன் வந்தவர்கள் கவிமணியை அழைத்து வரப்புறப்பட்டனர். ஆனால் ராஜாஜி, அவரை தானே நேரில் சென்று காண்பதே மரியாதை எனக் கூறினார். புத்தேரிக்கு வந்து கவிமணியை அரசவைப் புலவராக அமர்த்தி அழகு பார்க்க நினைத்தார். திருவிதாங்கூர் வேற்று மாநிலம் ஆனதால் சட்டச் சிக்கல் எழுந்தது. அதையும் தாண்டி அவரை அப்பணியில் ஈடுபட சென்னை மாகாண அரசு அன்றைக்கு வழி வகுத்தது. எனினும் அப்பதவியைப் பெற மறுத்ததோடு அரசவைப் புலவராய் அமர தன்னைவிட நாமக்கல் கவிஞரே ஏற்றவர் எனப் பரிந்துரை செய்தார் கவிமணி.

இன்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
பிறந்த தினம்.





**விஜயபாரதம் தேசிய வார இதழ்**

சந்தா செலுத்த / புதுப்பிக்க

**www.vijayabharatham.org**

என்ற இணையதளம் அல்லது

**044 - 26420870** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006